**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**O.S.NO.21/2022**

| **DEPOSITION OF WITNESS:** | DW.1 |
|---|---|

| NAME: | Harikrishnan | RELIGION: | |
|---|---|---|---|
| FATHER NAME: | | CASTE: | |
| VILLAGE: | | OCCUPATION: | |
| TALUK: | | AGE: | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 26.09.2022

நான் இந்த வழக்கில் 1 வது பிரதிவாதி என்னுடைய நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். அதை எனது தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொண்டு கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ,3 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக் கொண்டு தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

| S.No | Description of Documents | Remarks |
|---|---|---|
| 1. | 1 வது பிரதிவாதியின் ஆதார் கார்டு | நகல் |
| 2. | 2 வது பிரதிவாதியின் ஆதார் கார்டு | நகல் |

<u>வாதியின் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.எனது தந்தையார் பெயர் ஆதி சிவம். அவர் இறந்து விட்டார். அவருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி எனது தாயார் கஸ்தூரி. கஸ்தூரிக்கு நானும் எனது தம்பி நீலமேகனும் ஆகும்.

2.எனது அம்மா கஸ்துரின் தந்தை பெயர் செங்கல்வராயன். எனது அம்மா கஸ்துரி 1980 ஆம் ஆண்டு இறந்து விட்டார். எனது தாயார் இறந்த பிறது எனது தந்தை 2 வதாக 1983 ஆம் ஆண்டு திருமணம் செய்துக் கொண்டார். எனது தந்தை 2 வதா திருமணம் செய்துக் கொண்டவருக்கு

பிறந்தவர்கள் தான் கோவிந்தராஜ் மற்றும் கோடீஸ்வரி 2 மற்றும் 3 வாதிகள்.

3. எனது தந்தை 2 வதாக திருமணம் செய்துக் கொண்ட பெண்ணின் தந்தை பெயர் கண்ணையன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் முதல் மனைவி மற்றும் 2 வது மனைவி பெயர் கஸ்தூரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் வாதியின் தகப்பனார் பெயர் கண்ணையன் என்று தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் வாதி எனது தந்தையின் 2 வது மனைவியின் பெயர் கஸ்தூரி தான் என்றால் சரியல்ல.

4.முதல் வாதியின் பெயர் அனைத்து ஆவணங்களிலும் கஸ்தூரி என்று தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் தான் முதல் வாதி தாவா தாக்கல் செய்த போது கணவரின் பெயரும் தந்தையாரின் பெயரும் குறிப்பிட்டு தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகு தான் எனது தந்தையின் 2 வது மனைவி பெயர் கஸ்தூரி என்று எனக்கு தெரியவந்தது.

5.எனது தந்தையின் 2 மனைவி பெயரும் கஸ்தூரி என்பதால் தனது 2 வது மனைவியின் பெயரை வசந்தா என்று அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் வேண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆன்லைன் மூலம் விணப்பித்தார் என்றால் அது பற்றி தெரியாது. வாரிசு சான்றிதழ் தர எனது தந்தைக்கு 2 மனைவிகள் உள்ளதால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் 2 மனைவியின் பெயரும் ஒன்று தான் என்ற காரணத்திற்காக நிராகரிப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6.கண்ணையன் மகளான முதல் வாதியும் 2 மற்றும் 3 வாதிகளும் நான் மற்றும் 2 வது பிரதிவாதியும் எனது தந்தை ஆதிசிவத்தின் வாரிசுகள் எனபதில் ஆட்சேபனை இல்லை என்றால் முதல் வாதியான கண்ணையன் மகள் வசந்தா என்ற பெயரில் வாரிசு சான்றிதழ் அளித்தால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. பி.சா.ஆ.,1 2 வது பிரதிவாதியின் திருமண அழைப்பிதழ் பெண் வீட்டாரால் சோளிங்கரில் அடிக்கப்பட்டது என்றால் சரிதான். பெண் வீட்டாரால் 1ம் வாதியை வீட்டில் அழைக்கப்படும் பெயரை வைத்து பத்திரிகை போடப்பட்டுள்ளது என்பதால் அதை வைத்து 1 வது வாதியின் பெயர் வசந்தா என்று நிரூபிக்க முடியாது

என்றால் சரியல்ல.

7.பி.சா.ஆ.1 திருமண பத்திரிகை தவிர 1 வது வாதாதியின் பெயர் வசந்தா என்று நிரூபிக்க வேறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். வாசா.ஆ.2 எனது தந்தையாரின் 2 மனைவியின் ஆதார் கார்டு தான் என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பு சான்றிதழை 1 வது வாதி தான் வாங்கினார் என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பு சான்றிதழிலும் ஆதிசிவனின் மனவைி கஸ்தூரி என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

8.நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்திலும் வாதியின் பெயர் கஸ்தூரி என்று தான் குறிப்பிடடுள்ளேன் என்றால் தவறு. அனைத்து அரசு ஆவணங்களிலும் முதல் வாதியின் பெயர் கஸ்தூரி தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் இவ்வழக்கிற்காக 1 வது வாதியின் பெயர் வசந்தா என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 மற்றும் 4 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.எனது தந்தை ஆதிசிவனின் முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் அரி கிருண்ணனும், நீலமேகனும் என்றால் சரிதான். எனது தாயார் காலமான பின்பு தான் எனது தந்தை 2 வதாக முதல் வாதியை திருமண செய்துக் செய்துக் என்றால் சரிதான். எனது தந்தைக்கும் முதல் வாதிக்கும் பிறந்தவர்கள் தான் கோவிந்தராஜ் மற்றும் கோடீஸ்வரி என்றால் சரிதான். முதல் வாதியின் பெயர் வசந்தா என்பதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் பி.சா.ஆ.1 எனது தம்பியின் திருமண அழைப்பிதழ் தாக்கல் செய்துள்ளேன்.

2.1 வது வாதி வட்டாட்சியரிடம் எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் கேட்டு மனு அளித்திருந்தார் அந்த மனு எனது தந்தைக்கு 2 மனைவிகள் இருப்பதாக மனு நிராகரிக்கப்பட்டதே தவிர வசந்தா என்ற பெயரில் மனு தாக்கல் செய்யப்படாததால் மனு தள்ளுபடி செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல.